ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1785/21 - 2012 නොවැම්බර් මස 21 වැනි බදාදා - 2012.11.21
*1785/21 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 94/47* (III).

### *(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்*

*6 (2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) ஆகிய பிரிவுகளின் கீழான கட்டளை*

*(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும் 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வாழ்வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் -*

*(அ) மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்கு இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் காணி இடப்பரப்பு நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாதல் வேண்டுமென்பதுடன், , "கனேகொட கத்தரகம தேவாலய புனிதப் பிரதேசம்" என அழைக்கப்படுதல் வேண்டுமெனவும் வெளிப்படுத்துகின்றேன்; அத்துடன்*

*(ஆ) "கனேகொட கத்தரகம தேவாலய புனிதப் பிரதேசம்" என வெளிப்படுத்தப்பட்ட முழு இடப்பரப்புக்காகவும் உருவரைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கின்றேன்.*

விமல் வீரவன்ச,
நிர்மாண, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு மற்றும் பொது வாழ்வசதிகள் அமைச்சர்.

கொழும்பு.

**அட்டவணை**

**கனேகொட கத்தரகம தேவாலய புனித பிரதேசத்தை உள்ளடக்கியதான பிரதேசம்**
**(எல்லை வரையறைக்கான அட்டவணை I இலுள்ள துண்டு இல. 71)**

*நிலஅளவையாளர் நாயகத்தின் 2010, மாச்சு மாதம் 30 ஆந் திகதிய வரைபட இல.* Maha/DOL/*2010/08 இனால் காட்டப்பட்டதும், மத்திய மாகாணத்தில், கண்டி நிர்வாக மாவட்டத்தில் தொலுவ பிரதேச செயலாளர் பிரிவினுள் கனேகொட கிராமத்தில் அமைந்துள்ள 0.2441 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்டதுமான காணி இடப்பரப்பும் அதன் எல்லைகளும் பின்வருமாறு :-*

*வடக்கு :* துண்டு இல. *112* மற்றும் நீரோடை ;
*கிழக்கு :* நில அளவீடு சார்ந்த வரைபடம் இல. *320124* இல் வலயம் *4* இன் தாள் *1* இன் மீது விவரிக்கப்பட்டுள்ள துண்டு இலக்கங்கள் *35, 36, 37* ;
*தெற்கு :* நில அளவீடு சார்ந்த வரைபடம் இல. *320124* வலயம் *4* இல் தாள் *1* இன் மீது விவரிக்கப்பட்டுள்ள துண்டு இலக்கங்கள் *37* மற்றும் *38* ; அத்துடன் ;
*மேற்கு :* நில அளவீடு சார்ந்த வரைபடம் இல. *320124* இல் வலயம் *4* இன் தாள் *1* இன் மீது விவரிக்கப்பட்டுள்ள துண்டு இல. *38*.

*12- 112*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.